DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 1

| | |
|---|---|
| Name | : திருமதி.பொன்மாலா |
| Husband's Name | : மைக்கேல் துரைபாண்டி |
| Age | : 47 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 14th day of July, 2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

**நான் தற்போது, சென்னை கோயம்பேடு, சோமத்தம்மன் நகர், 3 வது செக்டார், கதவு எண்.33/22 ல் வசித்து வருகிறேன். அது என் சொந்த வீடு. என் கணவர் பெயர் மைக்கேல் துரைபாண்டி. இவ்வழக்கில் இறந்து போனவர் என் கணவர்தான். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் என் வீட்டில் குடியிருந்தார். கடந்த 28.04.2024 அன்று ஞாயிற்றுகிழமை மதிய வேளையில் எனது கணவர் மது அருந்தியிருந்தார். நானும், என் மகன் கோபாலகிருஷ்ணனும் வெளியே கடைக்கு போய்விட்டு வீட்டிற்கு வரும்போது மணி மதியம் 2.00 அல்லது 2.30 இருக்கும். அப்போது ஆஜர்**

எதிரி அவருக்கு வாடகைக்கு விடப்பட்ட எங்கள் வீட்டின் இரண்டாவது தளத்தில் இருந்தார். நானும், எனது மகனும் ஆஜர் எதிரியிடம் இரண்டு மாத வாடகை பாக்கியை கேட்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி என்னை அடிக்க ஓங்கினார் அதற்குள் மது போதையில் இருந்த என் கணவர், ஆஜர் எதிரியை விரட்டியதும், அவர் இரண்டாம் தளத்தின் மேலுள்ள தகர கூரையில் ஏறிவிட்டார். எனது கணவரும், என்னை தள்ளிவிட்டு அவரும் கூரையில் ஏறிவிட்டார். கீழே விழுந்த என்னை என் மகன் வந்து தூக்கினார். அதற்குள் அவர்கள் இருவரும் மேலே ஏறிவிட்டார்கள். மேலே என்ன நடந்தது என்று தெரியவில்லை. சரவணன் வீட்டு மாடியில் என் கணவர் விழுந்து விட்டார். மேலே இருந்த ஒருவர் என் கணவர் விழுந்து விட்டதை என்னிடம் கூறினார். என் மகன் சரவணன் வீட்டு மாடிக்கு சென்று என் கணவரை என் மகனும், சரவணனும் தூக்கி வந்தார்கள். என் கணவர் மயக்கத்தில் இருந்தார். உடம்பில் எந்த காயங்களும் இல்லை. உடம்பு ஜில்லிட்டது. யாரோ 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள். ஆம்புலன்ஸ் 2.30 மணிக்கு வந்து விட்டது. நானும், என் மகனும் எனது கணவரை கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு என் கணவர் இறந்து விட்டதாக கூறினார்கள், அப்போது மணி 3 இருக்கும். என்னை கோயம்பேடு காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள் நான் அங்கு

சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த புகாரில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. மறுநாள் எனது கணவரின் உடலை சடல பரிசோதனைக்கு பிறகு ஒப்படைத்தார்கள். நியூ காலனி சுடுகாட்டில் தகனம் செய்துவிட்டோம். என் கணவர் மாடியிலிருந்து விழுந்த போது ஆஜர் எதிரி எப்படி ஓடினார் என்றே தெரியவில்லை. மறுநாள் இரவுதான் ஆஜர் எதிரியை கைது செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் தனது மூத்தம வழக்கறிஞர் மதுரையில் இருப்பதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரினார். இவ்வழக்கு விசாரணையானது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு இன்று பட்டியலிடப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சியின் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் கு.வி.மு.ச.பிரிவு 309, IV வது Proviso clause (c) ன்படி (Dispense with) செய்யப்படுகிறது.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 2

Name : கோபால கிருஷ்ணன்.

Father's Name : மைக்கேல் துரைபாண்டி

Age : 18

Address :

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 14th day of July, 2025.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, சென்னை கோயம்பேடு, சோமத்தம்மன் நகர், 3 வது செக்டார், கதவு எண்.33/22 ல் வசித்து வருகிறேன். நான் தற்போது 12 ம் வகுப்பு படித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன மைக்கேல் துரைபாண்டி எனது தந்தை. ஆஜர் எதிரி எங்கள் வீட்டில் வாடகைக்கு இருந்தார். 29.04.2024 என்னுடைய பிறந்தநாள். அதற்காக 28.04.2024 அன்று துணி எடுத்து Alteration செய்வதற்காக நானும் எனது அம்மாவும் சென்றோம். மதியம் சுமார் 1.30 மணியளவில் திரும்பி வந்தோம். எனது அம்மா, ஆஜர் எதிரியிடம் வாடகை பாக்கி கேட்டதில் வாய் தகராறு

ஏற்பட்டது. எனது அம்மாவும் ஆஜர் எதிரியும் தரைத்தளத்திலிருந்து முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டில் இருந்தார்கள். எனது தந்தை முதல் தளத்தில் இருந்து கீழே இறங்கி வந்தார். ஆஜர் எதிரி 2 வது மாடியிலுள்ள ஓடு போட்ட தளத்தில் ஏறி விட்டார் பின்னாடியே எனது தந்தையும் துரத்தி சென்றார். இரண்டு பேருக்கும் சண்டை ஏற்பட்டது, என் அப்பா தவறி விழுந்து விட்டாரா இல்லை, ஆஜர் எதிரி தள்ளிவிட்டாரா என்று எனக்கு தெரியாது. என் தந்தை பக்கத்து வீட்டு மாடியில் விழுந்து விட்டார். பக்கத்து வீட்டுக்காரர் சத்தம் கேட்டு மேலே வந்தார். நானும் எங்கள் மாடியிலிருந்து அந்த மாடிக்கு இறங்கி சென்றேன். நானும், பக்கத்து வீட்டுக்காரரும் கீழே தூக்கி சென்றோம். கீழே விழுந்ததில் என் தந்தைக்கு பின் மண்டையில் அடிபட்டு ரத்தம் வந்து பேச்சு, மூச்சு இல்லாமல் மயக்கமாகிவிட்டார். நான் ஆம்புலன்ஸிற்கு போன் செய்தேன். 2.30 மணியளவில் ஆம்புலன்ஸ் வந்தது. நானும், எனது அம்மாவும் எனது தந்தையை ஆம்புலன்ஸில் ஏற்றி KMC (Kilpauk Meidcal College) மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பரிசோதித்து விட்டு என் தந்தை இறந்துவிட்டதாக மருத்துவமனையில் கூறினார்கள். மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள், காவல் நிலையத்திலிருந்து K11 காவல் நிலையம் வரும்படி கூறினார்கள். மாலை 4.30 லிருந்து 5.00 மணிக்குள் நான், என் அம்மா, பெரியப்பா

அண்ணன் ஆகியோர் சென்றோம். என்னையும், அம்மாவையும் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள், நடந்ததை கூறினோம்,. மறுநாள், மருத்துவமனைக்கு போலீசார் வந்து சடல விசாரணை செய்து சடல பரிசோதனைக்கு பிறகு அப்பாவின் உடலை ஒப்படைத்தார்கள். கோயம்பேடு எரி தகன மேடையில் தகனம் செய்தோம். ஆஜர் எதிரி அப்பா கீழே விழுந்ததும் ஓடிவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:—**

போலீசார் விசாரணையில் எனது அப்பா வெங்கடேசனை பிடிக்க மேலே சென்றார் என்றும், நானும் பின்னாலேயே சென்றேன் என்று கூறினேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரி எனது தந்தையை பார்த்து என் சந்தோஷத்திற்கு தொல்லையாக இருக்கிற நீ இத்தோடு தொலைந்து போடா என்று கொலை வெறியுடன் தள்ளிவிட்டதாக கூறினேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரியைப் பார்த்து பயந்தும், சமாதானமாகியும் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் தனது மூத்தம வழக்கறிஞர் மதுரையில் இருப்பதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரினார். இவ்வழக்கு விசாரணையானது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு இன்று பட்டியலிடப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சியின் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் கு.வி.மு.ச.பிரிவு 309, IV வது Proviso clause (c) ன்படி (Dispense with) செய்யப்படுகிறது.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 3

| | |
|---|---|
| Name | : சரவணன் |
| Father's Name | : ஆறுமுகம் |
| Age | : 35 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 14th day of July, 2025.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, சென்னை, சோமத்தம்மன் நகர், 3 வது செக்டார், கதவு எண்.24/418 ல் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 ஆகியோரை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். இவ்வழக்கில் இறந்து போன மைக்கேல் துரைபாண்டியை தெரியும். அ.சா.1 –ன் கணவர், ஆஜர் எதிரியைத் தெரியும். அவரும் பக்கத்து வீடுதான். 28.04.2024 அன்று மதியம் 2.30 மணியளவில் நான் எனது வீட்டில் T.V. பார்த்து கொண்டிருந்தேன். மொட்டை மாடியில் கல் எறிவது போல் சத்தம் கேட்டது. நான் மேலே போய் பார்த்தேன். அங்கு மைக்கேல் துரைபாண்டி மல்லாந்த நிலையில் விழுந்து

கிடந்தார். தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது, சுயநினைவில்லை. அவரது மகன் எங்கள் வீட்டு பக்கத்து வீட்டு மாடியில் நின்று கொண்டு அப்பா அப்பா என்று கத்தி கொண்டிருந்தான். எங்கள் வீட்டு வழியாக இறங்கிவந்து நானும், அவரது மகனும் அவரை கீழே கொண்டு வந்து ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு  அனுப்பிவைத்தேன். மறுநாள் அவர் இறந்து விட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என் வீட்டிற்கு வந்து மொட்டை மாடியில் அவர் விழுந்த இடத்தை  பார்த்தார்கள். என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையில் நான் சத்தம் கேட்டு மேலே சென்றதாகவும்,

ஆஜர் எதிரி இறந்து போனவரைப் பார்த்து "என் சந்தோஷத்திற்கு தொல்லையாக இருக்கிற நீ இத்தோடு தொலைந்து போடா" என்று கொலை வெறியுடன் தள்ளிவிட்டதாக கூறினேனா என்றால் இல்லை.  ஆஜர் எதிரியைப் பார்த்து பயந்தும், சமாதானமாகியும் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் தனது மூத்தம வழக்கறிஞர் மதுரையில் இருப்பதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரினார். இவ்வழக்கு விசாரணையானது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு இன்று பட்டியலிடப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சியின் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் கு.வி.மு.ச.பிரிவு 309, IV வது Proviso clause (c) ன்படி (Dispense with) செய்யப்படுகிறது.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |